**1.4 பணியமைப்பு – பேரூராட்சிகள் – தெருவிளக்குகளை பராமரிக்க மின் பணியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் – புதிதாக தோற்றுவித்தல் – பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி – ஆணை – வெளியிடப்படுகிறது.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.72 நாள் : 5.5.1998

படிக்கப்பட்டது :

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண். 12518–97–அ6 நாள்.24.9.97 மற்றும் 8.1.98

ஆணை :–

பேரூராட்சிகளின் எல்லைக்குட்பட்ட பொதுத் தெருக்களில் மின் விளக்குகள் அமைத்து அவற்றை நல்லமுறையில் பராமரிக்க வேண்டியது பேரூராட்சிகளின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். தற்போது பேரூராட்சிகளில் தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் தெருவிளக்குகள் நிறுவப்பட்டு அதன் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் சிறுசிறு பழுதுபார்க்கும் பணிகளுக்குக் கூட பேரூராட்சிகள் மின்வாரியப் பணியாளர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்க பேரூராட்சிகளுக்கென தனியாக மின் பணியாளர் (Wiremen/lineman) மற்றும் உதவியாளர் (Helper) பணியிடங்கள் தோற்றுவிக்கவும், அவற்றில் தகுதிவாய்ந்த பணியாளர்களை பணியமர்த்தவும் பேரூராட்சிகள் இயக்குநர் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகளுக்கென தனியாக மின்பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க கீழ்க்கண்டவாறு குறித்து அலகு (Specific Norms) நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | குறித்த அலகு. | பணியிடத்தின் பெயர். | எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | 300தெருவிளக்குகளுக்கு குறைவாக உள்ள இரண்டு பேரூராட்சிகளுக்கு | மின்பணியாளர் (Wireman/lineman) | 1 |
| (2) | 300 தெருவிளக்குகளுக்கு மேலும் 600 தெருவிளக்குகளுக்கு குறைவாகவும் உள்ள இரண்டு பேரூராட்சிகளுக்கு | 1) மின்பணியாளர் (Wireman/lineman) | 1 |
| | | 2) உதவியாளர் (Helper) | 1 |
| (3) | 600 தெருவிளக்குகளுக்கு மேற்பட்ட ஒரு பேரூராட்சிக்கு | 1) மின்பணியாளர் (Wireman/lineman) | 1 |
| | | 2) உதவியாளர் (Helper) | 1 |
| (4) | 1200 தெருவிளக்குகளுக்கு மேற்பட்ட ஒரு பேரூராட்சிக்கு | 1) மின்பணியாளர் (Wireman/lineman) | 1 |
| | | 2) உதவியாளர் (Helper) | 2 |

மேற்படி பணியிடங்களில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் கீழ்க்கண்ட கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

| பணியிடத்தின் பெயர். | கல்வித்தகுதி |
|---|---|
| 1) மின் பணியாளர் | ஐ.டி.ஐ. தொழில்கல்வி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| 2) உதவியாளர் | 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |

இப்பணியிடங்களுக்கு வயது வரம்பு அரசுப் பணிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் இருக்கும்.

**3.** கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேலே பத்தி 2ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பிற்காக மின்பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்த பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

1) நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின்படி பேரூராட்சிகளில் நியமனம் செய்யப்படவுள்ள மின்பணியாளர்களுக்கான செலவினத்தை பேரூராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதலளித்து, சம்மந்தப்பட்ட பேரூராட்சி மன்றங்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

2) பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் பேரூராட்சிகள் இயக்குநரால் பேரூராட்சியின் நிதிநிலைமையை பரிசீலித்து தேவையான பணியிடங்களைத் தோற்றுவிக்க அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

3) இப்பணியிடங்களுக்குத் தேவையான தகுதிவாய்ந்த பணியாளர்கள் மாவட்ட வேலை வாய்ப்பகங்கள் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளை பின்பற்றி நியமனம் செய்யப்பட வேண்டும்.

4) இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்படும் மின்பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் முறையே மாதம் ஒன்றுக்கு ரூ. 2000/– மற்றும் ரூ. 1700/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் கூடுதலாக்கப்படும்.

5) இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் முதலில் ஒரு ஆண்டு காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யப்பட வேண்டும். பின்னர், ஒவ்வொரு ஆண்டு காலத்திற்கும் இவர்களின் நியமனத்தை புதுப்பித்து, இவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து இவர்களை முறையான ஊதிய ஏற்றமுறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து தக்க ஆணை தனியாக பிறப்பிக்கும்.

**4.** ஏற்கனவே பேரூராட்சிகளில் போதிய தொழிற்கல்வித் தகுதியின்றி தினக்கூலி அடிப்படையில் தற்போது பணிபுரிந்து வரும் 42 தெருவிளக்கு இயக்குபவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள உதவியாளர் பணியிடங்களில் (Helper) மேற்கண்டவாறு தொகுப்பூதிய அடிப்படையில் முறையாக நியமனம் செய்யலாம்.

அ) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

ஆ) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஆனால் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை அவர்களை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பதிவின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளலாம்.

இ) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணியாற்றும் பணியாளர்களை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டு அவ்வாறு செய்யப்பட்ட பதிவின் அடிப்படையில் அவர்களை எடுத்துக்கொள்ளலாம்.

ஈ) பணியிடங்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள தேவையான கல்வித் தகுதி மற்றும் தொழில்நுட்பத் தகுதி ஆகியவற்றை கொண்டுள்ளவர்கள் மட்டுமே மேற்சொன்ன வழிமுறைகளில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

**5.** இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மற்றும் நிதித் துறையின் ஒப்புதலுடன் முறையே அதன் அலுவலர் சார்பற்ற குறிப்பாணை எண். 87/SLEP/98 நாள் **13.4.98** மற்றும் 1177/FS/P//98 நாள். **21.3.98**ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்